

Jean de La Fontaine & Lise Lahore

Le corbeau and the Fox – Fable multilingue

Éditions Migrilude 2022

Tamil / தமிழ்

(Copertina)	**காகமும் நரியும்**
(p. 2)	காகம் ஒன்று மரத்திலமர்ந்திருந்தது, அதன் வாயில் வெண்ணெய்த் துண்டொன்று
(p. 5)	நரியார், வெண்ணெய்த் துண்டின் வாசத்தில் ஈர்க்கப்பட்டு, தன் நையாண்டிக் குரலில் இவ்வாறு கூறியது:
(p. 7)	"ஆ, காக்கைகளின் பிரபுவே, நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள், எவ்வளவு பெருமையாக இருக்கிறீர்கள்!
(p. 8)	பாட்டுப் பாடும் திறமைக்கு ஏதுவாக உம் அழகான கருப்பு ஆடை,
(p. 10)	நீங்கள் எல்லாவற்றிற்கும் மத்தியில், பீனிக்ஸ் பறவையாக இருக்கிறீர்கள்! " நரியின் புகழ்ச்சியை அதிக விருப்புடன் கேட்ட காகமும்,
(p. 13)	தன் அழகான குரலை உடனே முழங்க விட்டது. காக்கையின் சொண்டிலிருந்த உணவும்,
(p. 14)	கீழேயிருந்த நரியின் வாய்க்குள் உருண்டு விழுந்தது. நரி சிரித்தபடி: „பரிசு வழங்கியதற்கு நன்றி! நீர் என்னிடமிருந்து இவ் அறிவுறுத்தலைப் பெறவும்: முகஸ்துதி செய்பவன் தன் பேச்சைக் கேட்பவர்களால் வாழ்கிறான்.
(p. 17)	இப் போதனை வெண்ணெய் கட்டியின் மதிப்பிற்குச் சமமானது"
(p. 18)	திகைத்த காகமும் சத்தியம் செய்தது: மீண்டும் தனக்கு அப்படி நடக்க விடக் கூடாதென்று.

Traduzione: Sugirtha Shanmuganathan

Coordinazione delle traduzioni:
Interbiblio
www.interbiblio.ch
info@interbiblio.ch